பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 மார்கழி 29 சனிக்கிழமை (13-01-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 48

# கிழக்கில் பெரும் தாக்குதலுக்கு அரசுத் துருப்புக்கள் குவிப்பு

## ஆயுத தளபாடங்களும் வந்து சேர்கின்றனவாம்

கொழும்பு, ஜனவரி 13

கிழக்குக் காடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக பாரிய தாக்குதல் ஒன்றை நடத்துவதற்காக அங்கு பெரும் எண்ணிக்கையிலான துருப்புகளை ஸ்ரீலங்கா அரசு குவித்து வருகின்றது.

பெரும் தாக்குதலுக்குத் தேவையான விமானங்கள், ஹெலிகள், யுத்த தளபாடங்கள், நவீன ஆயுதங்கள் ஆகியவையும், ஆயுதங்கள் மற்றும் துருப்புகளை ஏற்றியிறக்குவதற்குத் தேவையான கப்பல்கள் போன்றவையும் பாதுகாப்புப் படைகளுக்கு வந்து சேர்ந்தவண்ணம் உள்ளன.

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்ஸிகள் இத்தகவலை வெளியிட்டன.

மட்டக்களப்புக் காடுகளில் முகாம்களை அமைத்துள்ள விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்துவதற்காக மட்டக்களப்பில் படையினர் திரண்ட வண்ணமிருப்பதாக வெரித்தாஸ் வானொலி குறிப்பிட்டது.

புதிய தாக்குதல்களை நடத்துவதற்கு வசதியாக இராணுவத்திற்கு நவீன யுத்த தளபாடங்கள் கிடைத்துள்ளதாகவும் அந்த வானொலி தெரிவித்தது.

தாக்குதல் ஜெட் விமானங்கள், ஹெலிகள், அதிவேகப் படகுகள் போன்றவை ஏற்கனவே வெளிநாடுகளிலிருந்து வந்துசேர்ந்து விட்டன.

வானத்தில் அதியுயர் நிலை

(6 ஆம் பக்கம் பார்க்க))

## உடப்பு சம்பவம் 19 பேர் கைதாம்

கொழும்பு, ஜன. 13

புத்தளம் மாவட்டம் உடப்புப் பகுதியில் பெரும் தொகையான குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டது தொடர்பாக சந்தேகத்தின்பேரில் 19 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்களில் ஒருவர் பெண் என்று தெரிவிக்கப்படுகிறது.

விசாரணைகளின் பின்னர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வு யோசனை இம்மாதம் இல்லை

லண்டன், ஜன. 13

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக அரசு வெளியிட்டுள்ள யோசனைகள் அடுத்த மாதமே நாடாளுமன்ற தெரிவுக்குழு முன் சமர்ப்பிக்கப்படலாம் என்று பி.பி.ஸி. தெரிவித்தது.

நாடாளுமன்ற கூட்டத் தொடரை ஜனாதிபதி நேற்று ஒத்திவைத்துள்ளார்.

மீண்டும் அடுத்தமாதம் நாடாளுமன்றம் கூடிய பின்பே தீர்வு யோசனை நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படலாம் என்று பி. பி. ஸி தெரிவித்தது.

தீர்வு யோசனைகளை பொங்கலுடன் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன் சமர்ப்பிக்கப் போவதாக ஜனாதிபதி முன்னர் கூறியிருந்தார்.

(இ-3)

## இனி நடக்கப்போவது 4 ஆவது ஈழப்போர்

### ஹரிகுணதிலகா கூறுகிறார்

கொழும்பு, ஜன. 13

ஈழப்போர் மற்றொரு கட்டத்தைத் தாண்டிக்கொண்டிருக்கிறது. இனி நடைபெறப்போவது நான்காவது ஈழப் போராகவே இருக்கும்.

முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரிகுணதிலகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் கெரில்லா குழுவினரானாலும் —

படையினருடன் நடக்கும் மோதல்களில் பல சந்தர்ப்பங்களில் அதிநவீன ஆயுதங்களை அவர்கள் பயன்படுத்துகிறார்கள் என்றும் —

வடக்கில் விடுலைப் புலிகள் தொடர்ந்தும் பலமுள்ளவர்களாகவே திகழ்கின்றனர் என்றும் —

விடுதலைப்புலிகளை பூரணமாக ஒழிப்பதற்கு மிக நீண்ட காலம் எடுக்கும் என்றும் — அவர் தெரிவித்துள்ளார்.

## விசாரணைக்கு எடுக்கப்பட்டது

கொழும்பு, ஜன. 13

வடமத்திய, சப்பிரகமுக மாகாணசபைகளை கலைத்தமையை எதிர்த்து அந்த சபைகளின் முதலமைச்சர்கள் தாக்கல் செய்த மனுக்கள் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

(இ-3)

# தமிழரிடம் நிர்வாகத்தை வழங்கி படையினர் விலகிவிட வேண்டும்

## வாசுதேவ கூறுகிறார்

கொழும்பு, ஜன. 13

"யாழ்ப்பாணத்தின் நிர்வாகத்தை தமிழ் மக்களிடம் ஒப்படைத்துவிட்டு படையினர் விலகியிருக்க வேண்டும்.

இப்படிக் கோரிக்கை விடுத்துள்ளார் இரத்தினபுரி மாவட்ட பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார்.

அவசரகால நிலை நீடிப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிங்கள இராணுவம் யாழ். தமிழ் மக்கள் மத்தியில் இருப்பது கடினமானது. அங்கு தமிழ் மக்களின் நிர்வாகம் உருவாககப்பட வேண்டும்.

படையினர் அங்கிருந்து தூர விலகியிருக்க வேண்டும்.

யாழ். மக்களுக்கு முக்கியமானது மின்சாரம், வீட்டு வசதிகள் அல்ல. அதற்கு மேலாக அவர்கள் தமது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவதே முக்கியமானதாகும்.

வவுனியா முகாமில் உள்ளவர்கள் இன்னமும் சுதந்திரமாக நடமாட முடியாதநிலை இருந்து வருகிறது.

இப்படி அவர் மேலும் கூறினார்.

(இ-3)

## திருமலை வில்கம் விகாரை பகுதியில் நேற்று 2 ஆம் நாளாகத் தாக்குதல்

சாவகச்சேரி, ஜன. 13

திருகோணமலைப் பகுதியில், திருமலை — கண்டி வீதியில் உள்ள வில்கம் விகாரைப் பகுதியில் ஸ்ரீலங்காப் படையினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று வெள்ளிக்கிழமை இரண்டாவது நாளாகத் தாக்குதல் நடத்தினர்.

நேற்றைய தாக்குதலில் 3 ஸ்ரீலங்காப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதற்கு முதல் நாள் அதாவது வியாழக்கிழமை நடைபெற்ற தாக்குதலிலும் மூன்று படையினர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

திருகோணமலை நகரில் இருந்து சுமார் 6 மைல் தொலைவில் உள்ளது வில்கம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசை விமர்சிப்போர் யாழ்ப்பாணம் செல்லட்டும்

### அனுருத்த கூறுகிறார்

கொழும்பு, ஜன. 13

அரசை விமர்சிப்போர் முதலில் யாழ்ப்பாணம் சென்று நிலைமையை அறியட்டும்.

இப்படிக் கூறினார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த.

அவசரகாலச்சட்டம் நீடிப்புத் தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தை ஆரம்பித்து வைத்துப்பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

(இ-3)

## சந்திரிகா, லக்ஷ்மன், அனுருத்த கொடும்பாவிகள் நேற்று எரிப்பு

சாவகச்சேரி, ஜன. 13

மட்டுவிலில் நேற்று ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, லக்ஷ்மன் கதிர்காமர், அனுருத்த ரத்வத்தை ஆகியோரின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

நேற்று மாலை சரசாலை வடக்கு சனசமூக முன்றலில் இருந்து லக்ஷ்மன் கதிர்காமரின் கொடும்பாவியும் —

மட்டுவில் பகுதியில் இருந்து அனுருத்த ரத்வத்தை, சந்திரிகா ஆகியோரின் கொடும்பாவிகளும் — பறை மேளங்கள் ஒப்பாரிகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு இரவு 8-30 மணி அளவில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டு மைதானத்தைச் சென்றடைந்தன.

ஊர்வலத்தில் பெருவாரியான மக்கள் கலந்துகொண்டனர்.

மைதானத்தில் வைத்து கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

கொடும்பாவிகள் எரிக்கப்பட முன் கூட்டம் மற்றும் [illegible] றன.

(இ-15)

## கிராமசேவையாளர்கள் வன்னியில் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி, ஜன. 13

டிசம்பர் மாதச் சம்பளம் உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து கிளிநொச்சி, பூநகரி, கண்டாவளை பகுதி கிராமசேவையாளர்கள் கடந்த திங்கட்கிழமை ஆர்ப்பாட்டப்போராட்டம் ஒன்றை நடத்தினர்.

கிளிநொச்சி செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட பரீட்சைகள்

## மார்ச் 18 இலும், 25 இலும் நடக்கும்

சாவகச்சேரி, ஜன. 13

யாழ். பல்கலைக்கழக இரண்டாம் மருத்துவமாணிமீள் பரீட்சையை மார்ச் மாதம் 18 ஆம் திகதியும்—

மூன்றாம் மருத்துவமாணி பகுதி I க்கான பரீட்சையை மார்ச் மாதம் 25 ஆம் திகதியும்— நடத்துவதென யாழ். மருத்துவ பீட சபை நேற்று முடிவு செய்தது.

மருத்துவபீட சபையின் கூட்டம் நேற்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற சமயம் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்த மாணவர்களின் விரிவுரைகளை மந்திகையிலும், கைதடி சித்த மருத்துவத்துறை கட்டடத்திலும் நடத்துவது என்றும்—

இந்த பரீட்சைகளில் தோற்றுபவர்களை மார்ச் மாதம் 5 ஆம் திகதி சமுகமளிக்குமாறு கோருவது என்றும்— முடிவு செய்யப்பட்டது.

இந்தப் பரீட்சைகள் சாவகச்சேரியிலும், கிளிநொச்சியிலும் நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன. 13

அரசமைப்பின் 70 ஆவது சரத்தின் கீழ் நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஜனாதிபதி நேற்று நள்ளிரவில் இருந்து ஒத்திவைத்தார்.

நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடர் அடுத்த மாதம் 9 ஆம் திகதி முற்பகல் 9-15 க்கு மீண்டும் ஆரம்பமாகும். (இ-3)


## பாராட்டும் வாழ்த்தும்

சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலகத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக உதவிக் கல்விப் பணிப்பாளராகச் சிறப்புடன் சேவை புரிந்து, 13-01-96 லிருந்து ஓய்வுபெறும்.

திருவாளர் யோ. யோன்பிள்ளை

அவர்கள் குடும்பத்துடன் பல்லாண்டு காலம் நலமாக வாழ வாழ்த்துவதுடன் அவர் தனது சேவைக் காலத்தில் இன்முகத்துடன் எல்லோருடனும் பழகி ஆற்றிய சேவையை நன்றியுணர்வுடன் நினைவு கூருகின்றோம்.

பிரதிக் கல்விப்பணிப்பாளரும்,
அலுவலக உத்தியோகத்தர்களும்,
ஊழியர்களும்.

கோட்டக்கல்வி அலுவலகம்,
சாவகச்சேரி. (சி/3045)

## முச்சக்கர மோட்டார் ஊர்தி

உரிமையாளர், சாரதிகளுக்கான

## கலந்துரையாடல்

எதிர்வரும் 14. 01. 96 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 11. 00 மணிக்கு சாவகச்சேரி டச்சு வீதியில் அமைந்துள்ள டிறிபேக் கல்லூரியில் முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர், சாரதிகளுக்கான கலந்துரையாடல் நடத்த இருப்பதால் அனைத்து உரிமையாளர், சாரதிகளையும் தவறாது சமுகம் அளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தலைவர்
முச்சக்கர மோட்டார் ஊர்தி
சேவைச் சங்கம்

(39958)

## பிரார்த்திக்கின்றோம்

07 - 01 - 1996 இல் சிவபதம் அடைந்தவரும், எமது பாடசாலையில் பணிபுரியும்

செ. முருகவேள், செ. ரஞ்சன்

ஆகியோரின் தந்தையாருமான

**அமரர் சின்னத்துரை செல்லையா**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய சிவகாமி சமேத நடராஜப்பெருமானைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

யா/சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி
ம. ம. வி., வேலணை.

(39957)

## அறிவித்தல்

யாழ்ப்பாணத்தில் ஸ்ரான்லி வீதியில் இயங்கிவந்த

## கமல் பல்பொருள் விற்பனை மாடம்

தற்போது யாழ் வீதி, [கண்டி வீதி] கிளிநொச்சியில் இயங்கிவருவதை எமது வாடிக்கையாளருக்கு அறியத்தருகிறோம்.

★ மலசலகூட மாபில் வகை யாவும் ★ பெயின்ட் ★ கட்டடப் பொருள்கள்
★ சிமெந்து ★ குழாய்க்கிணறுப் பம் ★ எஸ்லோன் பைப் வகை
★ பிளைவூட் பலகை யாவும்

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

கமல் பல்பொருள் விற்பனை மாடம்
யாழ் வீதி, [கந்தசாமி கோவில் அருகாமையில்] கிளிநொச்சி.

[சி/3020]


# வவுனியா வருவோர் ஒரேநாளில் சோதனை முடித்து அனுப்பப்படுவராம்

## தமிழ்க்கட்சிகளிடம் அமைச்சர் நிமால் சிறிபால உறுதி

வடக்கில் இருந்து வெளியிடங்களுக்கு வரும் பயணிகளை வவுனியா தற்காலிக முகாமில் நீண்ட நாள்கள் தங்க வைக்காது ஒரே நாளில் சோதனைகளை முடித்து அனுப்ப ஏற்பாடு செய்வதாக வீடமைப்பு நிர்மாணத்துறை, பொது வசதிகள் அமைச்சரும், வடபகுதி புனர்வாழ்வுக் குழுவின் தலைவருமான நிமால் சிறிபால டி. சில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அலுவலகத்தில் அமைச்சர்களுக்கும் தமிழ்கட்சிப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று நடந்த பேச்சுகளின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கில் உள்ள அகதிகளின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

வடக்கே 55 லொறிகளில் உணவுப் பொருள்களை தினமும் அனுப்பநடவடிக்கை எடுக்கப்படும் என்றும்—

அந்த லொறிகளை சோதனை செய்யும் நடைமுறையில் மாற்றம் கொண்டு வரப்படும் என்றும் —

வடபகுதி அரச ஊழியர் சம்பளம், ஓய்வூதியர் கொடுப்பனவு தொடர்பான பிரச்சினைகளை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வருவதாகவும் — அவர் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் அமைச்சருடன் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையும், தமிழர் விடுதலைக்கூட்டணி, ஈ. பி. டி. பி. பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். [இ-3)

## படுகாயம்

ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளில் இருந்து தவறிவிழுந்த பெண் படுகாயமடைந்தார்.

வரணியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வரணி வடக்கைச் சேர்ந்த சோதிநாதன் மோகனராணி (வயது 39) என்ற பெண்ணே படுகாயமடைந்தவராவார். (இ-15)

## பயிர்ச்செய்கை பற்றிய புள்ளிவிவரம் சேகரிப்பு

1995-96 காலபோக நெற்செய்கை மற்றும் மேட்டுநிலப் பயிர்ச் செய்கைக்கான புள்ளி விவரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் புள்ளிவிவரக்கிளையினர் சேகரித்து வருகின்றனர்.

தற்போதைய போர்க்கால சூழ்நிலையினால் ஏற்பட்டுள்ள உணவுப் பற்றாக்குறையையும் பிற நெருக்கடிகளையும் தவிர்க்கும் நோக்கில் வளங்களை இனங்காணும் இத்தரவு சேகரித்தலுக்கான நடவடிக்கைகளில் அனைத்து விவசாயிகளையும் தம்முடன் ஒத்துழைக்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கேட்டுள்ளனர்.

விவசாயிகளால் செய்கை பண்ணப்பட்டுவரும் விளைநிலங்கள், கைவிடப்பட்ட செய்கை பண்ணக்கூடிய விவசாய நிலங்கள், அவற்றால் விளையும் உற்பத்தித்திறன் போன்ற பலதரப்பட்ட விவரங்களை புள்ளிவிவரக்கிளையினர் சேகரித்துவருவது குறிப்பிடத்தக்கது. (இ)

## கற்கோவளம் செபஸ்தியார் உற்சவம்

கற்கோவளம் புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த உற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து மாலை ஆராதனைகள் நடைபெற்று 19ஆம் திகதி தேவ நற்கருணை ஆராதனைகள் நடைபெறும். 20 ஆம் திகதி காலை திருநாள் திருப்பலி பருத்தித்துறை பங்குத் தந்தை வண. பி. எம். இம்மானுவல் அடிகள் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும். (இ)

## பரலோக அன்னை ஆலய திருநாள்

கரவெட்டி பரலோக அன்னை ஆலய குழந்தை யேசு திருநாள் நாளை கொண்டாடப்படவிருக்கிறது.

கடந்த 4 ஆம் திகதி நவநாள் வழிபாட்டுடன் ஆரம்பமான திருநாளில் இன்று நற்கருணை விழாவும், நாளை திருநாள் திருப்பலியும் இடம்பெறும். (இ-3)

# மாதாந்தம் 650 லொறிப் பொருள்கள் கிளிநொச்சி மாவட்டத்துக்கு தேவை

## ஆனால் இதுவரை வந்ததோ சொற்பம்

கிளிநொச்சி, ஜன. 13

குடாநாட்டிலிருந்து பெருமளவில் மக்கள் கிளிநொச்சி மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்துள்ளதை அடுத்து அம்மாவட்டத்திற்கு மாதம் ஒன்றுக்கு 650 லொறி பொருள்கள் தேவைப்படுகின்றன.

கடந்த நவம்பர் மாதத்தில் 115 லொறிகளும், டிசம்பர் மாதத்தில் 322 லொறிகளும் தாண்டிக்குளம் ஊடாக கிளிநொச்சி வந்தடைந்தன.

இம்மாதம் 490 லொறிகளில் பொருள்களை கிளிநொச்சிக்கு கொண்டுவருவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப் படுவதாக அரச அதிபர் திரு எஸ் தில்லைநடராஜா தெரிவித்தார். (ரி)

# ஒரு மாதத்துக்குள் வடபகுதியை கட்டுப்பாட்டில் கொண்டு வருவோம்

## அவசரகாலநிலை நீடிப்பு விவாதத்தில் அனுருத்த உரை

கொழும்பு, ஜன. 13

வடக்கில் இன்னும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை, அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பான அடுத்த விவாதம் நாடாளுமன்றத்தில் நடைபெற முன்னர், எமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவோம்.

அவசரகாலச் சட்டத்தை வேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் விவாதத்துக்கு பதில் அளித்துப் பேசுகையில் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புலிகள் தோற்கடிக்கப்பட வேண்டும். அப்போதுதான் அமைதியான சூழ்நிலை ஏற்படும்.

இதற்காக புலிகள் அழிக்கப்படவேண்டுமானால் அதை நாம் செய்வோம்.

யுத்தத்தினால்தான் பிரச்சினை தீர்க்கப்படும் என நாம் நம்பவில்லை. தமிழ் மக்களுக்கு இருக்கின்ற பிரச்சினையை தீர்த்து வைக்க, சகல மக்களும் ஒன்று சேரும் சூழ்நிலையை விரைவில் உருவாக்குவோம் என்றார். (இ-3)

## இடம்பெயர்ந்தோர் விவரம் கோருகிறது அரசு

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்தோர் விவரத்தை அத்தியாவசிய சேவைகள் நாயகம் யாழ். அரச அதிபரிடம் கேட்டுள்ளளார்.

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்தோர் மற்றும் வன்னிக்கு சென்றோர் தற்சமயம் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதியில் இருப்போர் விவரத்தை உடன் அனுப்புமாறு நேற்று அரச அதிபருக்கு அனுப்பிய செய்தியில் அத்தியாவசிய சேவைகள் நாயகம் கேட்டுள்ளார்.

இவ் வருடத்துக்கான உணவுத் தேவை குறித்து திட்டமிடுவதற்கே இந்த விவரம் கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிதீவிர சிகிச்சைப் பிரிவு இன்னும் இயங்கவில்லை

## இதனால் உயிராபத்து அதிகரிப்பு

மந்திகை, ஜன. 13

மந்திகையில் இயங்கிவரும் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர, அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகள் இயங்காதநிலையில் உள்ளதால் உயிராபத்துக்கள் அதிகரிக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் நேற்றும் உயிராபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்ட தொய்வு நோயாளி ஒருவர் அனுமதிக்கப்பட்ட சிலநிமிட நேரத்தில் மரணமானார்.

பருத்தித்துறை மூன்றாம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த விக்னேஸ்வரன் கமலமணி (வயது 45) என்ற குடும்பப் பெண்ணே மரணமானவராவார்.

இதே போன்று தொய்வு நோயினால் குழந்தைகள் உட்பட இன்னும் பலர் யாழ். ஆஸ்பத்திரி இடம் பெயர்ந்த கால எல்லைக்குள் இறந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-15)

## சித்த வைத்திய கிளினிக்

சாவகச்சேரி, ஜன. 13

சித்தவைத்திய கூட்டுறவுச் சங்கத்தின் சுகாதார சேவைப்பிரிவு வடமாராட்சி, மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் சித்த வைத்திய கிளினிக்குகளை ஆரம்பிக்க உள்ளது.

வடமராட்சிப் பகுதியில் ப. தெ. வ. கூ. சங்கங்களின் கரவெட்டிக் கொத்தணியிலும்—

தென்மராட்சிப் பகுதியில் ப. தெ. வ. கூ. சங்கங்களின் வரணிக் கொத்தணியிலும்—மேற்படி கிளினிக் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை வலிகாமம் பகுதியில் நடைமுறைப்படுத்தியது போன்று நடமாடும் சித்த வைத்திய சேவையும் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

## சொறி, சிரங்கு நோயினால் பலர் பாதிப்பு

சாவகச்சேரி, ஜன. 13

சாவகச்சேரி வைத்தியசாலையில் சொறி, சிரங்கு, நுளம்புக்கடியால் ஏற்படும் புண்கள் ஆகியவற்றுக்கு மருந்து கட்டுபவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும்—

பெருமளவு மக்கள் அடிப்படை வசதிகளின்றி முகாம்களிலும், வீடுகளிலும் நெருக்கமாக வாழ்வதும் இதற்கு ஒரு காரணம் என்றும்— தெரிவிக்கப்படுகிறது. (இ-13)

## கிடுகளுக்குப் பதிலாக பிளாஸ்டிக் கூரைத் தகடு

### கிளிநொச்சியில் பயன்படுத்த முடிவு

கிளிநொச்சி ஜன. 13

இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டம் வந்துள்ள மக்களுக்கு தேவையான குடியிருப்புகளை அமைக்க தென்பகுதியிலிருந்து அரச சார்பற்ற நிறுவனங்களால் கிடுகுகள் சேகரிக்கப்பட்டு கிளிநொச்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

ஆனால் கிடுகுகள் கிளிநொச்சி வந்து சேர அதிக செலவு ஏற்படுகின்றது எனவும்—

கிடுகுகளுக்குப் பதிலாக பிளாஸ்டிக் கூரைந் தகடுவைப் பெறலாம் எனவும்—வவுனியாவில் நடைபெற்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டத்தில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு எஸ் தில்லைநடராஜா தெரிவித்திருந்தார்.

இதனை அடுத்து கிடுகளுக்கு பதிலாக பிளாஸ்டிக் கூரைத் தகடுகளை வழங்க அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் இணங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-ரி)

## கூட்டுறவு பணியாளர் பரீட்சைமுடிவுகள்

சாவகச்சேரி, ஜன 13

கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர (உயர்தரம்) இடைநிலைப் பரீட்சைக்கு 41 மாணவர்கள் தோற்றினார்கள் என்றும்—

இவர்களில் 23 பேர் சித்தி அடைந்துள்ளனர் என்றும் யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபை தெரிவிக்கிறது.

அத்துடன் 18 மாணவர்கள் நூன சித்தி பெற்றுள்ளனர்.

இம் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை கொடிகாமம் ப. நோ. கூ. சங்க மேல் மாடியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

## கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு விசர் நாய் தடுப்பு மருந்து

கிளிநொச்சி, ஜன. 12

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி விசர் நாய்த் தடுப்பு மருந்து வந்து சேர்ந்துள்ளது.

தடுப்பூசி மருந்து இன்றி பல மாதங்களாக நோயாளர் கஷ்டப்படுவதாக தெரிவித்ததையடுத்து, 750 ''டோஸ்'' ஏ. ஆர். வி. மருந்து வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த மருந்து கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரிகளுக்கு பங்கிட்டு வழங்கப்படவிருக்கிறது. (இ-3)

## ஆங்கில வினாத்தாளுக்கு அளிக்கப்பட்ட விடைகள்!

கடந்த டிசம்பர் மாதம் நடத்தப்பட்ட ஜி. சீ. ஈ சாதாரண தரப்பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குளியாப்பிட்டியில் அமைந்துள்ள, விடைத்தாள்களைத் திருத்தும் நிலையமொன்றில் ஆங்கில விடைத்தாள்கள் திருத்தப்பட்ட போது புதுமையான விடைகள் அளிக்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்ததாம்.

ஆங்கிலக் கட்டுரை எழுதும்படி கேட்கப்பட்டதற்கு ''இந்த விடயங்கள் எங்களுக்குத் தெரியாது; ஆனால் எங்கள் ஆசிரியைக்கென்றால் தெரியும்'' என ஒருவரும் ''மன்னிக்கவும், எங்கள் பாடசாலையில் ஆங்கில ஆசிரியை இல்லை. இதற்கு விடையளிப்பது கடினம்; எங்கள் மீது கருணை காட்டுங்கள்'' என மற்றொருவரும் பதிலளித்துள்ளனர்.

## சந்திரிகாவுடன் தொண்டா முக்கிய பேச்சு நடத்துவார்

கொழும்பு, ஜன. 13

வடமத்திய, சப்பிரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் —

இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமான் அடுத்த சில தினங்களில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்து முக்கிய பேச்சுக்களை நடத்த விருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

அரசியல் நிலைமைகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி பேரம் பேசுவதில் வல்லவரான அமைச்சர் தொண்டமான் தற்போதைய நிலையில் ஜனாதிபதியுடன் இச்சந்திப்பைப் பயன்படுத்தி உச்சப் பயனைப் பெற்றுக்கொள்வார் என எதிர்பார்க்கலாம் என்று அரசியல் அவதானிகளை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

சப்பிரகமுவ மாகாணத்தில் பல்லாயிரக்கணக்கான இந்திய வாக்காளர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-6)

## பயிற்சிக் கருத்தரங்கு

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த சாரணத் தொண்டர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு பளை மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த அவசரகால முதலுதவிப் பயிற்சி பெற்ற தொண்டர்களுக்கான விசேட முதலுதவிக் கருத்தரங்கும் இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கும் பளை மகா வித்தியாலையத்தில் நடைபெறவுள்ளது.

பளைஉதவிஅரசாங்கஅதிபர் பிரிவைச் சேர்ந்த சாரணத் தொண்டர்கள், அவசரகால முதலுதவிப் பயிற்சித் தொண்டர்கள் ஆகியோரை இக்கருத்தரங்கில் தவறாது கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-15)

## மண்டைதீவில் சிறிய கடற்படைத் தளம்

மண்டைதீவில் சிறிய கடற்படைத்தளம் ஒன்றை ஸ்ரீலங்காக் கடற்படையினர் அமைத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

1993 இல் அங்கு அமைக்கப்பட்டிருந்த இராணுவ கடற்படைக் கூட்டுத் தளத்திலிருந்து நீரூந்து விசைப்படகு ஒன்றை கடற் புலிகள் கைப்பற்றியதிலிருந்து அங்கிருந்த கடற் படைத் தளம் அகற்றப்பட்டிருந்தது என்றும் —

தற்போது மீண்டும் அங்கு ஒரு சிறிய கடற்படைத் தளம் அமைக்கப்பட்டு வருகிறது என்றும் —

இத்தளத்திலிருந்து கல்முனைக்கு படகுப் போக்குவரத்தை மேற்கொள்வதற்கும் வடக்குக் கடற்பகுதியைக் கண்காணிப்பதற்கும் இந்தக் கடற்படைத்தளம் பயன்படுத்தப்பட உள்ளதாகவும் — தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## யாழ்ப்பாணத்தை கைப்பற்றியது மூலம் பயங்கரவாதத்தை அடக்க முடியாது

### ஐ. தே. க. எம்.பி. கூறுகிறார்

கொழும்பு. ஜன. 13

யாழ்ப்பாணத்தை பாதுகாப்பு படையினர் கைப்பற்றிவிட்டதால் மட்டும் பயங்கரவாதத்தை அடக்கிவிட முடியாது என்று ஐ. தே. க. களுத்துறை மாவட்ட பிரதிநிதி திலக் கருணாரத்தின கூறினார்.

அவசரகால சட்ட நீடிப்பு விவாதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:

வடக்கு-கிழக்குப் பகுதியில் மட்டுமல்ல மொனராகலை, பிபிலை, கதிர்காமம், பதுளை முதலான பகுதிகளிலும் பயங்கரவாத நடவடிக்கைகள் பரவலாக இடம் பெறுகின்றன.

கைப்பற்றப்பட்ட யாழ்ப்பாணப் பகுதியில் பொதுமக்கள் இல்லை. தமிழ் மக்களின் நல்ல அபிமானத்தை அரசு இழந்துவிட்டது— என்றார். (இ-3)

## சாவகச்சேரி

## பிரதேச சபைக்கு $7\frac{1}{4}$ லட்சம் ஒதுக்கீடு

தென்மராட்சி பிரதேச செயலரினால் செயலக பிரமாண அடிப்படையிலான மூலதனத் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி பிரதேசசபைக்கு 1996 ஆம் ஆண்டுக்கான நிதியாக 7 லட்சத்து 25 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியில் இருந்து பின்வரும் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

வேலைத் திட்டங்களும், அதற்கான நிதி ஒதுக்கீடுகளும் பின்வருமாறு:-

எழுதுமட்டுவாள் சந்தையில் மலசலகூடம் அமைத்தலுக்கு ரூ. 50 ஆயிரம்.

மீசாலை வயல்கரை வீதியை செப்பனிட ரூ. 50 ஆயிரம்.

கொடிகாமம் சந்தையில் கொட்டகை அமைக்க ரூ1 லட்சம்.

கைதடி வட. நவபுரம்-சந்திரபுரம் இணைப்பு வீதியை செப்பனிட ரூ. 50 ஆயிரம்.

நூலகங்களுக்குரிய புத்தகங்கள் கொள்வனவு செய்ய ரூ. 1 லட்சத்து 20 ஆயிரம்.

கச்சாய் ஆயுள்வேத வைத்தியசாலையை திருத்த ரூ. 50 ஆயிரம்.

வரணி ஆயுள்வேத வைத்தியசாலைக்கு தளபாடங்கள் வாங்க ரூ. 50 ஆயிரம்.

கைதடி தெற்கு-மாதர் சிசு பரிபாலன நிலையத்தில் மலசலகூடம் அமைக்க ரூ. 35 ஆயிரம்.

கைதடிச்சந்தியில் குழாய்க் கிணறு அமைக்க ரூ. 35 ஆயிரம்.

எழுதுமட்டுவாள் வடக்கு கிணறு அமைக்க ரூ. 45

கச்சாய் நூலக குழாய்க் கிணறு அமைக்க ரூ. 40 ஆயிரம்.

கரம்பைக்குறிச்சியில் கிணறு அமைக்க ரூ. 45 ஆயிரம்.

கைதடி மரக்கறிச் சந்தையில் 3 கொட்டகை அமைக்க ரூ. 60 ஆயிரம். (இ-31)

## மருந்து எடுத்துவர அனுமதிக்குமாறு யாழ். அரச அதிபர் கோரிக்கை

### பாதுகாப்பு அமைச்சுக்கு கடிதம்

சாவகச்சேரி, ஜன. 12

தனியார் மருந்து விற்பனை நிலையங்களுக்கும், தனியார் வைத்திய சாலைகளுக்கும் மருந்து எடுத்துவர அனுமதிக்குமாறு பாதுகாப்பு அமைச்சை யாழ். அரச அதிபர் திரு செ. பத்மநாதன் கேட்டுள்ளார்.

போதிய மருந்து வகைகளை எடுத்துவர அரச அனுமதிக்காததால், மருந்து வகைகளின் விலைகள் வெகுவாக அதிகரித்துள்ளதாகவும் —

மருந்து வகைகள் அவர்கள் எடுத்துவர அனுமதிக்குமாறும் — யாழ். அரசு அதிபர் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளார்.

கப்பல் மூலம் மருந்து வகைகளை எடுத்து வருவதற்கான அனுமதியை வழங்குமாறும் அவர் பிறிதொரு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பஜாஜ் ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. இ. நவரத்தினராசா, ஆடியன்பிட்டி ஒழுங்கை, யாழ் வீதி, சாவகச்சேரி. (39954)

கூரை ஓடுகள் 2000, முதிரைப் பலகைகள் 1000 சதுர அடி, அன்ரனாபைப் 5, T. V. நாஷனல் 14'' கலர், நீர் இறைக்கும் இயந்திரம் Mark 12 England தொடர்பு: கிருபா விடியோ, மீசாலை கிழக்கு, அல்லாரை. (39951)

### புத்தாண்டுப் பலன்கள்

சத்யாவின் எல்லா ராசிப் பலன்கள் ரூபா 10/- எங்கும் விற்பனையாகின்றன. 16-2-96 சனி மாற்றமும், 25-12-96 வரை வியாழ மாற்றமும் அடங்கிய பலன்கள். கிடைக்கும் இடம்: பரம் ஸ்ரோர்ஸ், பஸ் நிலையம், சாவகச்சேரி. (39947)

### மணமகன் தேவை

படித்த, அழகிய, கத்தோலிக்க மதப் பெண்ணுக்கு அரச, தனியார் அல்லது சொந்த வியாபாரம் செய்யும் அதே மத மணமகன் தேவை. விவரங்களுக்கு: இல. 50, மே/பா உதயன், சரசாலை. (39953)

### SPOKEN ENGLISH

முன்பு சுதுமலையில் இயங்கிய Able Spoken English தற்பொழுது வேம்பிராய் சந்தி, மீசாலையில் நடைபெறுகின்றது. தொடர்புகொள்ளவும். செ. செல்வராஜா. (40154)

ஆங்கிலம் போதிக்கப்படும். பொதுவாக மாணவர்கள் இடம்பெயர்ந்திருப்பதால் அவர்களின் இடங்களுக்குச் சமீபத்தில் நேராக வந்து போதிக்கப்படும். V. N. Kandasamy, A. I. B. Part-I (London) Inter (London) Dip-in-Eng-lish கைதடிச் சந்திக்கு அண்மையில் உள்ள ஒழுங்கை, Dr. சபாநாதனின் வீட்டுக்குச் சமீபமாக, கைதடி. (39950)

### போத்தல் தேவை

ஹொர்லிக்ஸ், விவா, ஜாம் போத்தல்கள் உள்ளவர்கள் அவற்றை கிரியோன் கூல்பார், ராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ் (சாவகச்சேரி), வேலவன் ஸ்ரோர்ஸ், செல்வராஜா ஸ்ரோர்ஸ் (பருத்தித்துறை), சுபாஸ் பேக்கவுஸ், ரேஸ்ற்லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட் (நெல்லியடி) இல் ஒப்படைக்கவும். பணத்தையும் பெற்றுக்கொள்ளவும். (சி-3090)

### விஞ்ஞானம், கணிதம்

ஆண்டு 6 முதல் O/L வரை விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்கள் தென்மராட்சியிலும், வடமராட்சியிலும் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். தொடர்புகளுக்கு இல. 51, மே/பா உதயன், சரசாலை. (39948)

## விவேகானந்தர் பிறந்த தின வைபவம்

சுவாமி விவேகானந்தரின் பிறந்ததினம் இன்று சனிக்கிழமை பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்படும்.

இவ்வைபவத்தில் சிறப்பு நிகழ்ச்சியாக கீதாமிர்த வாரிதி, ஞான சிரோன்மணி நா. வி. மு. நவரத்தினம் குழுவினரின் பக்தி இசை இடம் பெறும்.! (இ-173)

## உடன் தேவை

பாவிக்கக் கூடிய நல்ல நிலையிலுள்ள பின்வரும் பொருள்கள் உடன் தேவைப்படுகின்றன.

(1) இரும்பு பெட்டகம்
(2) அலுவலக தளபாடங்கள்
(3) கண்ணாடி அலுமாரிகள்

விற்பனை செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**சேரன் பணிமனை,**
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

நிர்வாகம்,
சேரன் பல்பொருள் வாணிபம்.

(சி-3040)

## கண்ணீர் அஞ்சலி

**மார்க்கண்டு ஜெகநாதன்** (மல்லி)
அவர்களின்

மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மு. சந்திரன்
அஙனாசி வியாபாரி - யாழ்ப்பாணம்.

(40161)

## ஆறாம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் நடராஜா சந்திரராஜா**
(போஸ்)
[முன்னாள் குகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர், தலவாக்கலை]

தோற்றம்: 20-2-1948 மறைவு: 19-12-1989

திதி: 13—01—1996

அன்பின் உருவங்கொண்ட எங்கள் ஆருயிர் அப்பாவே! ஆறாண்டு ஆனதுவோ? தங்கள் ஒளிவதனம் கண்டு இல்வாழ்க்கை கசந்ததுவோ?- அதனால் எம்மை விட்டு ஈசனடி சேர்ந்தீர்களோ? - பாசத்திற்கேங்கும் உங்கள் மனைவி மக்களுடன் சேர்ந்திருக்க ஊழ்வினைதான் விடவில்லையோ? — பாலர் எங்களைத் தவிக்கவிட்டு பாசக்கயிறை ஏற்றீர்களோ? - ஏங்கித் தவிக்கும் எங்களை விட்டு ஈசனுடன் ஐக்கியமானீர்களோ? - எங்கள் உறவை ஒரு கணத்தில் விட்டுப் பிரிய தங்கள் மனந்துணிந்ததுவோ? - ஓராயிரம் ஆண்டு சென்றாலும் நாம் மறவோம்.

''போஸ்'' என்னும் தங்கள் திருநாமம் தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் நினைவுடன் வாழும்;
மனைவி: திருமதி சந்திரராஜா,
மக்கள்: தினேஷன், சிவஅனுஜா, நிஷாந்.

மீசாலை மேற்கு. கோண்டாவில் கிழக்கு.

(39847)

## வாக்களிப்பில் ஐ. தே. க கலந்து கொள்ளவில்லை

கொழும்பு. ஜன. 13 அவசரகாலச் சட்டத்தை ஒருமாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை நேற்று முன்தினம் 108 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று நிறைவேறியது.

பிரேரணையை ஆதரித்து 113 உறுப்பினர்களும், எதிர்த்து 5 உறுப்பினர்களும் வாக்களித்தனர். ஐ. தே. க உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. (இ-3)

## தர்மிஷா ரவல்ஸ்

08 - 01 - 1996 திங்கள் பிரயாணம் செய்யவிருந்த 15 நோயாளர்களும் வயோதிபர்களும் இன்று காலை 9 - 00 மணிக்கு சந்திக்கவும். (39955)

## வேலை வாய்ப்பு

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் பாது காவலர்களுக்கான பதவிக்கு வெற்றிடங்கள் இருப்பதால் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**சேரன் பணிமனை**
தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி.

நிர்வாகம்,
(சி/3041( சேரன் பல்பொருள் வாணிபம்.

## பொதுக் கூட்ட அறிவித்தல்

யாழ் மாவட்ட
வாடகைக் கார் உரிமையாளர்களுக்கான
**பொதுக் கூட்டம்**

எதிர்வரும் 14 – 01– 96 அன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 - 30 மணிக்கு வலிகாமம்; தென்மராட்சி பகுதிகளைச் சேர்ந்த வாடகைக் கார் உரிமையாளர்களுக்கு சாவகச்சேரி வீதியில் அமைந்துள்ள றிபேக் கல்லூரியிலும், அன்றையதினம் மாலை 3 - 30 மணிக்கு வடமராட்சியைச் சேர்ந்த வாடகைக் கார் உரிமையாளர்களுக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் இப் பொதுக்கூட்டம் இடம்பெறும். எனவே சகல வாடகைக் கார் உரிமையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நன்றி

தலைவர்
யாழ். மாவட்டம்
வா. மோ. கார். சே. சங்கம்

(39952)

## கண்ணீர் அஞ்சலி

இலங்கை மின்சார சபை மத்திய மின் நிலையத்தில் பணிபுரியும்
திரு. எஸ். எவ். சேவியர்
(களஞ்சியப் பொறுப்பாளர்)
அவர்களின் அன்புத் தாயாரான
திருமதி
**சூசைப்பிள்ளை அன்னம்மா**

அவர்களது மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஊழியர் நலன்புரிச் சங்கம்.

மத்திய மின் நிலையம்,
சுன்னாகம். (40071)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**வேலுப்பிள்ளை சபாரத்தினம்**

கடந்த 15-12-1995 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது கழகத்தின் செயலாளர்
லயன் ச. சந்திரகுமார் அவர்களின் தந்தையார்
அமரர் வேலுப்பிள்ளை சபாரத்தினம்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியை இன்று(13-01-1996) சனிக்கிழமை இல்லத்தில் நடைபெறுகின்றது.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அரிமா கழகம்,
சாவகச்சேரி.

(39930)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உதயன்

### இப்போதைக்கு இல்லை?

விடுதலைப் புலிகளை முழுவதுமாகத் தோற்கடித்த பின்னரே அரசின் அதிகாரப் பகிர்வுத் திட்டம் மக்களின் அங்கீகாரத்துக்காக அவர்கள் முன் சமர்ப்பிக்கப்படும் —

இவ்வாறு வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்த முழங்கியிருக்கிறார்.

பத்து நாள்களுக்கு முன்னர் தான் — தமது புதுவருடச் செய்தியில் — ஜனாதிபதி சந்திரிகா அரசாங்கத்தின் அரசியல் தீர்வு யோசனை தைப்பொங்கலுடன் சமர்ப்பிக்கப்படும் என்று பூடகமாகத் தெரிவித்திருந்தார்.

இன்னும் சில தினங்களில் மலரப் போகும் தைப்பொங்கலுடன் ஒரு புதிய யுகத்திற்கான அடித்தளத்தை இடமுடியும் என்பது எனது உறுதியான நம்பிக்கை — என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

அதனை வெளிப்படையாக உறுதி செய்யும் விதத்தில் அரசமைப்பு விவகார, நீதித்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், அரசின் தீர்வு யோசனை சட்டவரைவாக விரைவில் மக்களுக்குச் சமர்ப்பிக்கப்படும் — என்று தெரிவித்தார்.

ஆனால் இப்போது அமைச்சர் அனுருத்த கூறுவதைக் கேட்டால் அரசியல் தீர்வு என்ற ஒன்று இப்போதைக்கு மக்கள் முன் வைக்கப்பட மாட்டாது என்றே எண்ண வேண்டியுள்ளது!

இராணுவ வெற்றி போருக்கும், இனப்பிரச்சினைக்கும் முடிவை—தீர்வை—கொண்டு வராது என்பது அரசாங்கத்துக்கு நன்றாகத் தெரியும் என்று ஜனாதிபதியும், ஜி. எல். பீரிஸ் போன்ற சில அமைச்சர்களும் பகிரங்கமாகக் கூறி வருகிறார்கள்.

ஆனால் அனுருத்தவோ, இராணுவ வெற்றியை ஈட்டிய பின்னர் தான் — விடுதலைப் புலிகளை வென்றபின்னர் தான் — அரசியல் தீர்வு என்று கூறுகிறார்.

இந்த இரண்டில் யார் சொல்வதை நம்புவது? எவர் சொல்வது செயலாகப் போகிறது?

அனுருத்த சொல்வதுதான் நடக்கும் என்று பெரிதும் எதிர்பார்க்கலாம்! ஏனெனில் விடுதலைப் புலிகளை அரச படைகள் முழுதாக வெல்லப் போவது என்பது நடக்கப் போகிற காரியம் அல்ல.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதன் மூலம் போர் முடிவுக்கு வந்து விட்டதாகக் கருத முடியாது என்று சந்திரிகாவே கூறியிருந்தார்.

அனுருத்த கூறுவது போல நான்கு வாரங்களில் கிழக்கிலிருந்து புலிகளை வெளியேற்ற முடிந்தாலும் கூட, போர் முடிவுக்கு வந்து விடாது. விடுதலைப் புலிகளை முழுமையாக தோற்கடித்து விட முடியாது.

ஆகக் குறைந்தது இன்னும் இரண்டு மூன்று வருடங்களுக்கு இலங்கையில் சிவில் யுத்தம் நீடிக்கும் என்று ஜே. என். டிக்ஸிற் போன்றவர்கள் மதிப்பிடுகின்றனர்.

சந்திரிகாவின் விருப்பமும் அதுவே!

போரைத் தொடர்வதன் மூலமே 2000 ஆம் ஆண்டு நவம்பர் வரை நிறைவேற்று ஜனாதிபதியாகத் தமது பதவிக் காலத்தை அனுபவிக்கலாம் என்பது அவரின் உள்நோக்கம்!

# வாக்குறுதியை நிறைவேற்றினால் தேர்தலிலிருந்து ஒதுங்கத் தயார்!

## அரசுக்கு ரணில் சவால்

கொழும்பு, ஜன. 13

வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு மாதம் ஆயிரத்து 500 ரூபா உதவிக் கொடுப்பனவை வழங்கப்போவதாக பொது மக்கள் ஐக்கிய முன்னணி கடந்த பொதுத் தேர்தலின் போது மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தது. இந்த வாக்குறுதியை அரசு நிறைவேற்றுமானால் வடமத்திய, சப்ரகமுவ மாகாணசபைகளுக்கு நடைபெறும் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்இக் கொள்வதற்கு ஐக்கிய தேசியக்கட்சி தயாராக இருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த சனிக்கிழமை களுத்துறை மாவட்டத்தில் நடைபெற்ற ஐ. தே. க. சம்மேளனக் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 12 வருடகாலமாக யுத்தத்தை நடத்திக் கொண்டு நாட்டை அபிவிருத்தி செய்தோம். கிழக்கு மாகாணத்தையும் எமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தோம்.

ஆனால் அரசு இன்று இவற்றை எல்லாம் கைவிட்டு விட்டது.

வேலை இல்லாத இளைஞர்கள் யுவதிகளுக்கு வழங்குவதாக அரசு வாக்குறுதி அளித்த ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவை அரசு வழங்குமானால் மாகாணசபைத் தேர்தலில் இருந்து மட்டும் அல்ல பொதுத்தேர்தலில் இருந்தும் ஒதுங்கிக் கொள்ள ஐ. தே. க. தயாராக இருக்கிறது.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ)

## வயிற்றோட்டம் இன்னும் கட்டுப்பாட்டில் இல்லை

### நேற்றும் ஒரு குழந்தை மரணம்

வயிற்றோட்ட நோய் காரணமாக நேற்றும் ஒருகுழந்தை மரணமானது.

மந்திகை அரசினர் வைத்தியசாலை வார்ட்டில் தங்கிச் சிகிச்சை பெற்றுவந்த சாவகச்சேரி கச்சாய் வீதியைச்சேர்ந்த நாகேந்திரம் நாகதீபன் (வய 5) என்ற குழந்தையே மரணமானதாகும்.

இதேவேளை நேற்றும் இரு குழந்தைகள் வயிற்றோட்ட நோய் காரணமாக வார்ட்டில் அனுமதிக்கப்பட்டனர்.

கரவெட்டியைச் சேர்ந்த ரவீந்திரன் விஜிதா (வயது 10 மாதம்), குடத்தனையைச் சேர்ந்த அன்ரனி நிசரிதா (வயது7மாதம்)ஆகியயோரே இந்த இரு குழந்தைகளும் ஆகும்.

இவர்களுடன் தற்போது வார்ட்டில் ஆறு குழந்தைகள் சிகிச்சை பெற்றுவருகின்றன.

## கிளிநொச்சி செயலகத்தில் வேலைப்பளு அதிகரிப்பு

குடாநாட்டிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்திற்குப் பெருமளவிலான மக்கள் இடம்பெயர்ந்ததை தொடர்ந்து கிளிநொச்சிச் செயலகத்தில் வேலைப்பளு அதிகரித்துள்ளது.

இந்நிலையைச் சமாளிப்பதற்காக செயலக ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறும் –

ஊழியர்களுக்கான அடிப்படை வசதிகளை வழங்குமாறும்— கொழும்பிலுள்ள அதிகாரிகளை கிளிநொச்சி திரு.எஸ்.அரச அதிபர்தில்லைநடராஜா கேட்டுள்ளார். (இ-ரி)

## மா மூடைகளுக்குள் அரசின் தீர்வுத் திட்டம்

மந்திகை, ஜன. 13

வட பகுதி மக்களுக்கு நிவாரணமாக அனுப்பப்படும் மா மூடைகளுக்குள் ஸ்ரீலங்கா அரசின் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்ட பிரசுரங்களும் வைத்து அனுப்பப்படுகின்றன.

உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்க இமையாணன் வடக்கு 34ஆம் இலக்க கிளையில் இத்தகைய பிரசுரங்கள் மா மூடையில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன.

இதே போன்ற ''தமிழ் மக்களுக்கான அறிவிப்பு'' ''விடுதலைப் புலிகளுக்கு அறிவித்தல்'' என்ற சிறு துண்டுப் பிரசுரங்கள் நிவாரணமாக வழங்கப்படும் சீனி, பருப்பு பைக்கெட்டுக்களிலும் வைக்கப்பட்டுவருகின்றன.

இத்தகைய பிரசுரங்கள் கடந்த காலத்தில் விமானத்தில் இருந்தும் ஹெலிக்கொப்டர்களில் இருந்துமே வீசப்பட்டு வந்தன.

விடுதலைப் புலிகளினால் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவங்களைத் தொடர்ந்து இந்தப் பிரசுரங்களைத் தமிழர்களிடம் திணிக்க ஸ்ரீலங்கா அரசு இப்படியான தந்திரத்தைக் கையாளுகிறது. (இ-15)

## குடும்ப அட்டைப்பிரதி கால எல்லை நீடிப்பு

சாவகச்சேரி, ஜன. 13

குடும்ப அட்டைப் பிரதி பெற்றுக்கெள்வதற்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் குடும்ப அட்டைப் பகுதிப் பொறுப்பாளர் பத்திரிகைக்கு அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இராணுவ நடவடிக்கை காரணமாக அண்மையில் இடம்பெயர்ந்தபோது குடும்ப அட்டைகளைத் தவறவிட்ட வலிகாமம் பகுதியை சேர்ந்த பொது மக்கள் குடும்ப அட்டைப் பிரதியைப் பெற்றுக்கொள்வதற்கு வடமராட்சி, தென்மராட்சிப் பகுதி குடும்ப அட்டைச் செயலகங்களில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன,

எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் குடும்ப அட்டைப் பிரதிக்கு விண்ணப்பிப்பவர்களிடமிருந்து கட்டணம் எதுவும் அறவிடப்பட மாட்டாது. அத்துடன் கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தலின்றியே விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து குடும்ப அட்டைப் பிரதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் தென்மராட்சி. வடமரரட்சிப் பகுதிகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் திருத்தங்களுக்காக கையேற்கப்படும் என்பதையும் பொது மக்களின் கவனத்திற்கு குடும்ப அட்டைப் பகுதியினர் அறியத் தருகின்றனர்.

மேலதிக விவரங்களுக்கு அந்தந்தப் பகுதிக் குடும்ப அட்டைச் செயலகங்களுடன் தொடர்பு கொள்ளும்படியும் கேட்டுக்கொள்கின்றோம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## மண்டேலாவுக்கு இந்திராகாந்தி விருது

புதுடில்லி, ஜன. 13

சர்வதேச நீதி மற்றும் நல்லிணக்கத்துக்கான இந்திராகாந்தி விருது தென்ஆபிரிக்கா ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இந்த விருதையும் ஒரு லட்சம் ரூபா ரொக்கப் பணத்தையும் மண்டேலாவின் சார்பில் தென் ஆபிரிக்க நீதித்துறை அமைச்சர் ஓமார் புதுடெல்லியில் பெற்றுக் கொண்டார்.

# முகாம்களுக்கு வெளியே தங்கியுள்ள மக்களுக்கு ஐ.நா. தூதரகம் உதவும்

சாவகச்சேரி, ஜன. 13

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சிப்பகுதிகளில் வீடுகளிலும், நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளவர்களுக்கு உடுபுடைவை மற்றும் நிவாரணப் பொருள்களை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் வழங்கவிருக்கிறது.

நலனோம்பு நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு பல தொண்டர் அமைப்புக்கள் பிளாஸ்டிக் வாளி, கோப்பைகள், உடுபுடைவகளை வழங்கி வந்தன.

இதன் காரணமாக அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் எடுத்து வந்துள்ள நிவாரணப் பொருள்களை நலனோம்பு நிலையங்களுக்கு வெளியில் உள்ளவர்களுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபரின் சிபார்சுக்கு ஏற்ப இவை வழங்கப்படவிருக்கின்றன. (இ-3)

# இடம்பெயர்ந்த 206 பேருக்கு வடமராட்சியில் உதவிப்பணம்

வடமராட்சி. ஜன, 13

வலிகாமம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மாதாந்த உதவிப் பணம் பெறுவோரில், 206 பேருக்கு பருத்தித்துறை (வடமராட்சி வடக்கு) பிரதேச செயலர் பிரிவிலுள்ள தபாலகங்களில் அடுத்த வாரம் முதல் மாதாந்த உதவிப் பணம் வழங்கப்படவுள்ளது

யாழ். பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 15 பேருக்கும், தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 55 பேருக்கும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 27 பேருக்கும், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 10 பேருக்கும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 45 பேருக்கும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 18 பேருக்கும், உடுவில் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 22 பேருக்கும் சங்கானை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 12 பேருக்கும் வேலணை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 2 பேருக்கும் இந்த உதவிப் பணம் வழங்கப்படும்.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள பருத்தித்துறை வல்வெட்டித்துறை தபால் நிலையங்களிலும், தம்பசிட்டி, மருதடி, வியாபாரிமூலை திக்கம், தொண்டமானாறு துன்னாலை, நெல்லண்டை வல்லிபுரம், சமரபாகு. அல்வாய் உப தபால் நிலையங்களிலும் இந்த மாதாந்த உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்படும். என பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ஆ. சிவசாமி அறிவித்துள்ளார்.

மாதாந்த உதவிப்பணம் பெறும் 206 பேரின் விவரப் பட்டியலை பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பார்வையிடலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜப்பானிய புதிய பிரதமர் பதவி ஏற்பு

டோக்கியோ, ஜன.13

ஜப்பானின் புதிய பிரதமர் ஏசின் மோட்டோ மன்னர் அக்கிட்டோவின் முன்னிலையில் நேற்று முன்தினம் பதவியேற்றார்.

கூட்டணிக் கட்சிகளின் 21 பேர் அடங்கிய புதிய அமைச்சரவையும் நேற்றுப் பதவியேற்றது.

ஜப்பானில் 38 ஆண்டுகளாக ஆட்சி செய்து வந்த சுதந்திர ஜனநாயகக் கட்சி 1993 ஆம் ஆண்டு பதவியிழந்த பின்னர் மீண்டும் கூட்டணிக் கட்சிகளின் உதவியுடன் தற்போது பதவிக்கு வந்துள்ளது. (இ-01)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடமராட்சியிலும் பாம்புத் தொல்லை

வடமராட்சிப் பகுதியிலும் பாம்புத் தொல்லை அதிகரித்து வருகிறது.

நேற்று முன்தினம் இரவு வீதியால் சென்று கொண்டிருந்தபோது பாம்புக்கடிக்கிலக்காகி இருவர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மாலுசந்திப் பிள்ளையார் கோவிலுக்குச் சென்றுவிட்டு திரும்பிய, அல்வாய் கிழக்கைச் சேர்ந்த சிதம்பரநாதன் இராசையா (வயது 45) என்பவர் மாலுசந்தி வைரவர் கோவிலுக்கு முன்பாகவும் — புலோலி தெற்கைச் சேர்ந்த சின்னத்துரை அருள்வேந்தன் (வயது 13) என்ற சிறுவன் கடைக்கு மண்எண்ணெய் வாங்கச் சென்ற வேளையும் பாம்பினால் கடியுண்டனர்.

கடந்த 12 நாட்களில் இந்த இருவருடன் மொத்தம் 10 பேர் பாம்பினால் கடியுண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதில் இருவர் மரணமடைந்துள்ளனர். பாம்புக்கடிச் சம்பவங்கள் தென்மராட்சியிலேயே அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-15-173)

# பளைப் பகுதியில் சட்டவிரோதமாக விறகு தறிப்போர் அதிகரிப்பு

வியாபாரிமூலை, ஜன. 13

பளைப்பகுதியில் உள்ள காடுகளில் உத்தரவின்றி மரங்களை வெட்டுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இயக்கச்சி, தம்பகாமம், புதுக்காடு போன்ற இடங்களில் காட்டு மரங்கள் இரவு வேளையில் களவாக வெட்டப்படுகின்றன.

விறகுத் தேவைக்காக பச்சை மரங்களை தறிக்க வேண்டாமென விறகு வியாபாரிகளிடம் பளை வட்ட பொறுப்பாளர் (திரு. கீதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

(இ-152)

## மாணவ தாதியர் பரீட்சை

கொழும்பு, ஜன. 13

மாணவத் தாதியருக்கு பயிற்சி அளிப்பதற்கான பரீட்சை எதிர்வரும் 27ஆம் திகதி நடத்தப்படவிருக்கிறது.

கிளிநொச்சி, சாவகச்சேரி, வடமராட்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய இடங்களிலும் பரீட்சை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்தோருக்கான பரீட்சை நிலையம் கிளிநொச்சியில் நிறுவப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்என்றுபரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(இ-3)

## கிளிநொச்சியில் வீதி நாடகம்

''இறுதி அழைப்பு'' என்ற போர்க்கால வீதி நாடகம் தற்போது வன்னிப் பகுதியில் நடித்துக் காண்பிக்கப்படுகிறது.

## உடப்பு ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் 2 படகுகளும் இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் —

இந்தப் படகுகள் உடப்பு கடற்கரைப் பகுதிக்கு குண்டுகளைக் கொண்டு வருவதற்கு விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப் பட்டுள்ளமை பொலீஸ் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாகவும் —

இந்தச் சம்பவத்தின் முக்கிய சந்தேகநபரும் அவரது குடும்பத்தினரும் உடப்புப் பகுதியிலிருந்து தலைமறைவாகியுள்ளனர் என்றும் சிலாபம் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

(இ-17)

## கிழக்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் பறந்தவாறு யுத்தக் களத்தைக் கண்காணிக்கக் கூடிய வசதி மிக்க நவீன விமானங்கள் மட்டுமல்லாமல் ''லேசர்'' மூலம் இலக்குகளைத் தாக்கக் கூடிய — நவீன தொழில் நுட்பங்களுடன் தயாரான — யுத்த உபகாரணங்களும் அரசுப் படைகளுக்கு கிடைத்த வண்ணமுள்ளன என்று தெரிவித்த அந்த வானொலி— ரஷ்யாவிலிருந்து எம். ஐ. 17 மற்றும் எம். ஐ. 24 ரக ஹெலிகளும், விமானங்களும் அண்மையில் ஸ்ரீலங்கா விமானப்படைக்கு வந்து சேர்ந்ததையும் சுட்டிக்காட்டியுள்ளது.

நீரடியிலிருந்து மேற்கொள்ளப்படக் கூடிய தாக்குதல்களை முறியடிப்பதற்கு வசதியாக சீனாவிடமிருந்து நவீன யுத்தக் கப்பல்களை ஸ்ரீலங்கா கடற்படை பெற்றிருப்பதையும் அந்த வானொலி மேலும் சுட்டிக்காட்டியது.

(உ-6)

## திருமலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லிகாரை.

ரோந்தில் ஈடுபட்டிருந்த படையினரே நேற்றும் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகினர்.

வியாழக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலில் ஏ. கே. ரக துப்பாக்கிகள்– 3, அதற்குரிய ரவைக் கூடுகள் — 9, கைக்குண்டுகள் — 2, நடுத்தர ரவைகள் — 163 ஆகியன புலிகளால் கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் கிடைக்கவில்லை.

நேற்று நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து, விமானப் படையினரின் ஹெலிக்கொப்டர் ஒன்று அப்பகுதியில் தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-3)

# மட்டக்களப்பில் சிப்பாய் மிதி வெடியில் கால் இழப்பு

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் மிதிவெடியில் சிக்கி இராணுவ சிப்பாய் ஒருவர் தனது இரு கால்களையும் இழந்தார்.

கும்புறுமுனை இராணுவ முகாமில் இருந்து வாழைச்சேனை இராணுவ முகாமுக்கு நேற்று முன்தினம் கலை 10 மணிக்கு ரோந்து சென்ற வேளையே மிதிவெடியில் இந்த சிப்பாய் சிக்கி தனது இருகால்களை இழந்தார்.

மேலும் ஒரு சிப்பாய் படுகாயமடைந்தார்.

இந்த சம்பவத்தை யடுத்து படையினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் —

இதில் கிண்ணியடியைச் சேர்ந்த சிதம்பரபிள்ளை (வயது62) காயமடைந்தார் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## கிராம சேவையாளர்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தி மகஜர் ஒன்றை மேலதிக அரசாங்க அதிபரிடம் அவர்கள்கையளித்தனர்.

அவர்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை வருமாறு :-

★ டிசம்பர் மாதச் சம்பளத்தை பணமாக வழங்க வேண்டும். ஜனவரி மாதச் சம்பளத்தை பொங்கலுக்கு முன் வழங்க வேண்டும்.

★ நலனோம்பு நிலையங்களை பராமரிப்பதற்கு கொடுப்பனவு வழங்க வேண்டும் அங்கு பணியாற்ற தேவையான காகிதாதிகள் வழங்கப்பட வேண்டும்.

★ பிரயாணத்துக்கு சைக்கிள் ரயர், ரியூப் வழங்கப்பட வேண்டும்.

(இ-3)

# மரண அறிவித்தல்கள்

## பண்டிதர் வி. ந. வரப்பிரகாசம்

பண்டிதர் வினாசித்தம்பி நல்லதம்பி வரப்பிரகாசம் (12-01-96) பருத்தித்துறையில் காலமானார்.

இவர் திரேசம்மாவின் அன்புக்கணவரும், ஜெயரட்சகதாஸ், பற்றிமாதேவி, மெசியதாஸ், அமலநாயகி, பிரியதாஸ், கிருபாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தி, காலஞ்சென்ற சிவகுருநாதன், றூபி, றொபின், பத்மதனேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயச்சித்திரா, ஜெயஜீவன், ஜெயச்செல்வி, ஜெயுச்செல்வன், ஜெயதீபன், அனுராதா, பாரதி, அரன், திமோத்தாஸ், இனோக்தாஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (13-01-96) பி. ப. 2.00 மணியளவில் 31/2, கலட்டிவளவு லேன் (பகுத்தித்துறை டிப்போவிற்கு பின்வீதியில்) நடைபெறும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மெசியதாஸ்
(மகன்)

14A, பெந்தைக் கோஸ்தே வீதி,
கண்டிவீதி,
யாழ்ப்பாணம். (40163)

## வீரகத்தி கிருஷ்ணபிள்ளை

(புகையிரதத் திணைக்களம்)

புலோலி தெற்கைச் சேர்ந்த இளைப்பாறிய வீரகத்தி கிருஷ்ணபிள்ளை 10 – 01-96 புதன்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற பார்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், பரமேஸ்வரன் (கணக்குப் பதிவாளர். கொழும்பு), தேவேஸ்வரி [தேவி], தேவகி (ஆசிரியர், புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் 10 -01- 1996 இல் கியான் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
பிள்ளைகள்

புலோலி தெற்கு,
புலோலி. (40160)

## சின்னக்குட்டி கந்தப்பு

(அரசாங்க ஒப்பந்தக்காரர்)

கரவெட்டி தெற்கைச் சேர்ந்த சின்னக்குட்டி கந்தப்பு அவர்கள் 9-1-96 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இரத்தினம் (சிமெந்துக் கூட்டுத் தாபனம். காங்கேசன்துறை), கோபால் சங்கர் (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), திருமதி க.வேதவனம், திருமதி சீ.மதிவதனி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், க.தவராசா, ச.சீவரத்தினம் (பிரதேச செயலகம் கரவெட்டி), திருமதி இ.சின்னப்பிள்ளை ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 11.1.96 அன்று கொழும்பில் நடைபெற்றன இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச சீவரத்தினம்
(மருமகன்)

கரவெட்டி தெற்கு,
கரவெட்டி. (40162)

# மரண அறிவித்தல்

## திருமதி கமலமணி விக்னேஸ்வரன்

தும்பளையைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலமணி விக்னேஸ்வரன் 11 – 01 – 96 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற முருகேசு பாக்கியம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற பரராஜசிங்கம் தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், விக்னேஸ்வரன் (சவுதி) அவர்களின் அன்பு மனைவியும், ஷர்மினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி) இன் அன்புத் தாயாரும், மனோன்மணி, தயாபரன் ஆகியோரின் சகோதரியும். பேராசிரியர் அ. சண்முகதாஸ் (யாழ். பல்கலைக்கழகம்), வசந்தி, காலஞ்சென்ற பரராஜசிங்கம் (HNB), காலஞ்சென்ற பரமேஸ்வரி, திருமதி ஞானேந்திரன், திருமதி இராஜதுரை, இராஜசேகரம், ஆனந்தசந்திரன், ஜெகநாதன், திருமதி அருள்ஜோதிசிவம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், கலைச்செல்வி, குகசிறி, திருநங்கை, ஞானசபேசன், செந்தூரன் ஆகியோரின் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14 - 01 - 96 அன்று காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோரியடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பேராசிரியர் அ. சண்முகதாஸ்

நெல்லண்டை வீதி,
தும்பளை,
பருத்தித்துறை. (40074)


## அறிவித்தல்

# ★ பூபாலசிங்கம் புத்தகசாலை ★

சாவகச்சேரி இல. 8, நவீன சந்தை மேல்மாடியில்
இயங்கத் தொடங்கியுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம். (சி/2939)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிக பணிமனையில் 13-01-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.